நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No.187/2024

## P.W. 2 -ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | கார்த்திகாயணி |
| தந்தை / கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 2** |
| வயது | : | 23 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025-ஆம் வருடம், ஜுன் மாதம், 25-ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 03.53PM)

1. நான் தற்போது பெரியசோரகை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எனக்கு கண் பார்வை முழுமையாக தெரியாது. நிழல் மட்டும்தான் தெரியும். நான் பத்தாம் வகுப்பு படிக்கும் வரை பார்வை திறன் சற்று குறைவாக இருந்தது. அதற்கு பிறகு ஏற்பட்ட நரம்பு பாதிப்பால் எனக்கு முழுமையாக பார்வை திறன்

போய்விட்டது.இந்த சம்பவத்தின் போதும் பார்வை திறன் முழுவதுமாக இல்லை.

2. 2019ம் வருடம் காலை 8 மணி அளவில் வீட்டிற்கு அருகில் நாய்கள் சத்தம் போட்டு கொண்டிருந்தது. எனது அப்பா நாய்களை துரத்திவிட்டார். பிறகு எனது அப்பாவும் அம்மாவும் வெளியே சென்றுவிட்டார்கள். நான் மட்டும் தனியாக வீட்டில் இருந்தேன். நான் வீட்டின் தாழ்வாரத்தில் உட்கார்ந்து படித்து கொண்டிருந்தேன்.அப்போது தேவடியா பையா யார்ருடா நாயை அடித்தது. வெளியே வாங்கடா கேனபூண்ட மற்றும் கெட்டவார்த்தையால் திட்டி கொண்டே பெருமாள், அவருடைய மகன் ஜெகதிஸ், அவருடைய இளைய மகன் சுதாகர், ஆகியோர் வந்தனர். அவருடைய மூத்த மகன் ஜெகதிசும் கெட்ட வார்த்தையால் திட்டிகொண்டே வந்தார்.
3. நான் வீட்டிற்கு உள்ளே படித்து கொண்டு இருந்தேன். பெருமாள் மற்றும் ஜெகதிஸ் கையில் கோலுடன் உள்ளே வந்தனர். நான் சேரில் உட்கார்ந்து படித்து கொண்டு இருந்தேன். நான் அமர்ந்திருந்த சேருக்கு கீழே நாய் இருந்தது. பெருமாள் அவர் மகன் ஜெகதிஸிடம் நாயை அடிடா என்று சொன்னார். ஜெகதிஸ் கோலால் எனது வலது தொடையில் அடித்தார். பின்பு நாயையும் அடித்தார். எதற்காக அடிக்கிறீர்கள் என்று நான் கேட்டேன். பெருமாளும், ஜெகதிசும் என்னை அப்படித்தான்டி அடிப்பேன் தேவடியா கண்டராஓலி என்று திட்டினார்கள்.
4. எதுவாக இருந்தாலும் என்னுடைய அப்பாவும் அம்மாவும் வந்த பிறகு பேசிக் கொள்ளலாம் என்று சொன்னே. எதிரிகள் சென்றுவிட்டார்கள். நான் நடந்ததை செல்போன் மூலம் எனது அம்மாவுக்கு சொன்னேன். மேற்சொன்ன சம்பவங்கள் 11 மணிக்கு மேல் நடந்தது.3 மணிக்கு மேல் என்னுடைய அம்மா வீட்டிற்கு வந்தார். அதன் பிறகு பெருமாள் வீட்டிற்கு சென்று எதற்காக தனியாக இருந்த எனது மகளை அடித்தீர்கள் என்று கேட்க சென்றார்.
5. எனது அம்மாவையும் அப்படிதான்டி அடிப்பேன் என்று கெட்ட வார்த்தையால் திட்டியதை பின்னாடி பால்வாடியில் இருந்து பெருமாள் பேசியதை நான் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு எனது அப்பா பெருமாளிடம் சென்று எதற்காக மகள் மற்றும் மனைவியை அடித்தாய் என்று கேட்டுவிட்டு வீட்டிற்கு வந்து விட்டார். பிறகு எதிரிகள் பெருமாள், ஜெகதிஸ், செல்வி மூன்று பேரும் கல்லால் அடித்து

கொண்டே வீட்டிற்கு வந்தார்கள் . அவர்கள் பேசியதை வைத்து வந்தது மேலே சொன்ன மூன்று நபர்கள் என்று தெரிந்து கொண்டேன். அவர்கள் வீசிய கற்கள் எனது அப்பாவின் மீது பட்டது. எதிரிகள் அங்கிருந்த மம்பட்டியால் எனது அம்மாவையும் அப்பாவையும் அடித்தார்கள். யார் எப்படி அடித்தார் என்று எனக்கு தெரியாது. நடந்த சம்பவத்தை எனது தம்பி ஸ்ரீகாந்த வீடியோ எடுத்து கொண்டு இருந்தார். எதுக்குடா வீடியோ எடுக்கிறாய் என்று அவனையும் அடித்து விட்டார்கள். போன் கீழே விழுந்து விட்டது.

6. அடித்த மம்பட்டியை எதிரிகள் எடுத்து சென்று விட்டனர்.பெருமாளுடைய மூத்த மகளும் அவருடைய கணவரும் எனது வீட்டிற்கு வந்து அவர்களும் அருவருக்க தக்க கெட்ட வார்த்தையால் திட்டினர். அதன் பிறகு எங்களுடைய வீட்டிற்கு வெளியே நின்ற கொண்டிருந்து ஸ்கூட்டியை போட்டோ எடுத்தார்கள். அந்த வண்டியில் போகிறவர்கள் யாராக இருந்தாலும் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்கள்.
7. என்னுடைய அம்மாவும் அப்பாவும் நங்கவள்ளி அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்து கொண்டு வந்தார்கள். நான் தாரமங்கலத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

   (மேற்படி சாட்சி ஊனமுற்றவர் என்ற நிலையில் இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கின் எதிரிகள் தன்னை தாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தனது தொடையில் கோலால் அடித்ததாக சாட்சியம் அளித்துள்ளதால் மாற்று திறனாளிகள் உரிமைகள் சட்டம் பிரிவு 92(b) ன் கீழான குற்றசாட்டுக்கு போதுமான முகாந்திரங்கள் இருப்பதாக தெரிவித்து கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த வழக்கை சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரியதன் அடிப்படையில் இந்த விசாரனை இத்துடன் நிறுத்தி வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.28PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.